ஒவ்வோர் ஈயரும் தமது சபையையும், திருத்தந்தையோடு ஒன்றித்து எல்லா ஆயர்களும் முழுத் திருஅவையையும் குறிக்கின்றனர்.

**தனிப்பட்ட சபைகளில் தலைவராக நியமிக்கப்பெற்ற ஒவ்வோர் ஆயரும் தங்களிடம் ஒப்படைக்கப்பட்ட இறைமக்கள் பகுதியின் மேலன்றிப் பிற சபைகளின் மேலோ அனைத்துலகத் திருஅவையின் மேலோ அருள்பணி அதிகாரம் செலுத்துவதில்லை. எல்லா ஆயர்களும் நம்பிக்கையின் ஒற்றுமையையும் திருஅவை முழுவதற்கும் பொதுவான ஒழுங்கு முறைகளையும் பேணிப் பாதுகாக்க வேண்டும்;** கிறிஸ்துவின் மறையுடலிடமும், முக்கியமாக வறியோரும் வருந்துவோருமான அதன் உறுப்பினர்களிடமும், நீதியின் பொருட்டுத் துன்புறுத்தப்படுவோரிடமும் (மத் 5:10) அன்பு கொள்ளும்படி நம்பிக்கை கொண்டோருக்குக் கற்பிக்க வேண்டும்; இறுதியாக, **நம்பிக்கை பரவுவதற்காகவும், உண்மை முழுவதன் ஒளி எல்லா மனிதருக்கும் தெரிவதற்காகவும், திருஅவையனைத்திற்கும் பொதுவான எல்லாச் செயல்களையும் அவர்கள் பேணி வளர்க்க வேண்டும்.** அனைத்துலகத் திருஅவையின் பகுதியாகத் தமது சபையைச் சரிவர ஆண்டு, சபைகளின் கூட்டுக் குழுவான முழு மறையுடலின் நலனுக்காகப் பயன்தரும் முறையில் அவர்கள் உதவுகிறார்கள் என்பது உண்மையாகும்.

உலகமெங்கும் நற்செய்தியை அறிவிக்கும் அலுவல் அருள்பணியாளர் குழுவைச் சார்ந்தது. பொதுவான பொறுப்பைச் சுமத்தியதன் மூலம் இவர்கள் அனைவருக்கும் கிறிஸ்து பொதுவாகக் கட்டளை தந்தார். எனவே, தனிப்பட்ட ஆயர்கள் தமது அலுவல் வாய்ப்பளிப்பதற்கு ஏற்ப ஒருவர் ஒருவருடனும் பேதுருவின் வழிவருபவருடனும் பணி ஆற்றும் ஒரு குழுவாக அமையக் கடமைப்பட்டுள்ளனர்; பேதுருவின் வழிவருபவரிடமே கிறிஸ்துவின் பெயரைப் பரப்பும் பெரும்பணி சிறப்பான முறையில் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றது. ஆகவே, ஆயர்கள் தாமே நேரடியாகவும் நம்பிக்கை கொண்டோரை ஊக்கத்துடன் ஒத்துழைக்குமாறு தூண்டுவதாலும் நற்செய்தி அறிவிக்கப்படும் நாடுகளுக்கு அறுவடையாட்களையும் அருள் வாழ்வுக்குரிய, உலகு சார்ந்த வளங்களையும் தந்துதவ முழுமுயற்சி எடுக்க வேண்டும். இறுதியாக, **ஆயர்கள் அனைத்துலக அன்புச் சமூகத்தில், பிற சபைகளுக்கும், முக்கியமாக அடுத்திருப்பவையும் வறியனவுமான சபைகளுக்கும் பழங்காலத்தின் போற்றத்தக்க மரபுக்கு ஏற்பத்** தாராளமாகச் சகோதர மனநிலையோடு உதவி அளிப்பார்களாக.

ஒரே குறிக்கோளை அடைவதற்காகக் கூடிச்செயலாற்றும் தலச்சபைகளின் வேறுபாடு, பிளவுபடாத் திருஅவையின் பொதுமையைத் தெளிவாகக் காட்டுகின்றது. இதே முறையில், குழு மனப்பான்மையை நடைமுறையில் செயல்படுத்த ஆயர் குழுக்கள் பயன்தரும் பல்வகையான பணிகளில் இன்று ஈடுபட முடியும்.

INTERNAL CIRCULATION ONLY
BUL 01/2024

தயாரித்தவர்கள்: செய்தி ஆதாரம் இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடு Austin Flannery OP, 1975
திருத்தம்: மாமறைமாவட்ட மேய்ப்புப்பணி மையம் (API)
மின்னஞ்சல directorapikl@gmail.com

6 & 7 னவரி 2024
ஆண்டவரின் திருக்காட்சி பெருவிழா

NEW WAY OF BEING CHURCH
newbec

## மண்ணுலகிற்கு உப்பும் உலகிற்கு ஒளியும்:

ஒன்றிப்பு (உள்ளார்ந்த), பங்கெடுப்பு (படைப்பாற்றல்) மறைத்தூது (இணைப்புப் பாலமாக) பணியில் தூய ஆவியின் துணையுடன் செவிமடுத்து, கொண்டாட்டத்துடன் இணைந்து பயணிப்பது (மாற்கு 15:16)



மாதாந்திர கருப்பொருள்:
திருஅவையும் அதன் பன்முகத்தன்மையும்

# திருஅவை

## இரண்டாம் வத்திக்கான் ங்க திருஅவை கோட்பாட்டு விளக்கம்

21 நவம்பர் 1964 திருத்தந்தை ஆறாம் பவுல் அவர்களால் அதிகாரபூர்வமாக வெளியிடப்பட்டது.

எண்: 23. **தனிப்பட்ட சபைகளுடனும் அனைத்துலகத் திருஅவையுடனும் ஒவ்வொரு ஆயரும் ஒருவருக்கொருவர் உறவு கொண்டுள்ளனர்** என்பதிலிருந்தும் அவர்கள் குழுவாக ஒன்றித்திருக்கின்றனர் எனும் உண்மை தெளிவாகிறது. உரோமை ஆயர், பேதுருவின் வழிவருபவர் என்ற முறையில், ஆயர்களுக்கும் நம்பிக்கை கொண்டோரின் கூட்டத்திற்கும் இடையே நிலவும் ஒற்றுமையின் நிலையான, காணக்கூடிய ஊற்றாகவும் அடிப்படையாகவும் அமைகிறார். அனைத்து உலகத் திருஅவையின் உருவில் அமைக்கப்பெற்ற, தனிப்பட்ட தத்தம் சபைகளில் தனித்தனி ஆயர்கள் ஒற்றுமையின் காணக்கூடிய ஊற்றாகவும் அடித்தளமாகவும் அமைந்து இருக்கின்றனர். தனிப்பட்ட இசசபைகளிலும் இச்சபைகளாலும்தான் தனித்தன்மை வாய்ந்த ஒரே பொதுத் திருஅவை நிலை நிற்கிறது. இக்காரணத்தாலேயே அமைதி, அன்பு, ஒற்றுமையால்